ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ  அதி விசேஷமானது

අංක 2375/03 – 2024 මාර්තු මස 11 වැනි සඳුදා – 2024.03.11
2375/03 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

**2024 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல.: 4-3/10/2022/MV/144.
பி. செ. குறிப்பு இல.: BD/EL/LND/69B/AQUSN/05.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 14.

### அட்டவணை

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், எல்ல.

II. **காணியின் விபரம்** : ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் எல்ல பிரதேச செயலாளர் பிரிவில் இல. 69B, ஹீல்ஓயா கிராம அலுவலர் பிரிவில், கினலன்வத்தை (உடகும்பல்வெல) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2023.12.05 ஆந் திகதி, B/ELL/2023/1231 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள் :

*01.* **துண்டு 'A' – கினலன்வத்தை – விஸ்தீரணம்: 6.0703 ஹெக்டயார்**

வடக்கு: வை. சி. டி. வீரக்கொடி உரிமைகோரும் புலத்தெவிலெபதன மற்றும் வீதி (பிரதேச சபை) ; கிழக்கு: வை. சி. டி. வீரக்கொடி உரிமைகோரும் புலத்தெவிலெபதன வீதி (பிரதேச சபை) மற்றும் தோட்ட வீதி ; தெற்கு: வீதி (பிரதேச சபை), தோட்ட வீதி மற்றும் நமுணுகுல பெருந்தோட்ட கம்பனி உரிமை கோரும் கினலன்வத்தை ; மேற்கு: நமுணுகுல பெருந்தோட்ட கம்பனி உரிமை கோரும் கினலன்வத்தை.

EOG 03 - 0077

1A – G 41565 – 34 (2024/03)

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவு (அ) வின் கீழான கட்டளை*

**2024 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல.: 13/99/FR/81.
பி. செ. குறிப்பு இல.: ල/ප්‍රාලේ/3/3/5/4/2.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவு (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இங்கு கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் I ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த II ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் இருப்பாட்சியை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 07.

**அட்டவணை**

I. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், லக்கல - பல்லேகம.

II. **காணியின் விபரம்** : மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் லக்கல - பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவில் லக்கல உடசியபற்று சிறு பிரிவில், எட்டன்வல கிராம அலுவலர் பிரிவில் எட்டன்வல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இல. பி.ஆ.வ. 21, உள்வரைபட இல. 57, தாள் இல. 10 கா.வி.ப.ப இல. 90, 2009.05.29 ஆந் திகதிய பிரதேசவியல் ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர், விஸ்தீரணத்தைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள் :

01. **துண்டு இல. 484 – ஹூரிகஸ்முல்ல இடம – விஸ்தீரணம்: 0.2129 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு இல. 485 ; கிழக்கு: துண்டு இல. 485 ; தெற்கு: துண்டு இல. 485 ; மேற்கு: துண்டு இல. 485.

EOG 03 - 0079